ஹிஸ்டமின் - எதிர்ப்பு மருந்துகளில் சில, மற்றவற்றைக் காட்டிலும், அதிக துக்கத்தை ஏற்படுத்தக்கூடியவை. எனினும், புதிதாக வந்திருக்கும் மருந்துகள் அவ்வளவாக துக்கத்தை ஏற்படுத்துவதில்லை. எ.கா. லொரடாடின் (Loratadine) மற்றும் செடிரிசைன் (Cetirizine).

ஹிஸ்டமின் - எதிர்ப்பு மருந்துகள், வாய், மூக்கு, தொண்டையை வரண்டு போகச் செய்பவை. வாய் வரண்டு போகாமலிருக்க, இனிப்பில்லாத மிட்டாய் சப்பலாம், சிறு ஐஸ் கட்டி மெல்லலாம் அல்லது எச்சிலை ஒத்த திரவம் பயன்படுத்தலாம். எனினும், தொடர்ந்து 2 வாரங்களுக்குமேல் வாய் வரண்டு இருந்தால் மருத்துவரிடம் சோதித்துக் கொள்ளுங்கள்.

ஒவ்வாமைக்காக நீங்கள் தோல் பரிசோதனை செய்து கொண்டால், பரிசோதனைக்கு முன்பாக நீங்கள் இந்த மருந்து எடுத்துவருவதை மருத்துவரிடம் தெரிவியுங்கள். ஏனெனில், இம்மருந்து அப்பரிசோதனையின் முடிவுகளைப் பாதிக்கக்கூடும்.

## மருந்தை நான் எப்படி **வைத்திருக்க** வேண்டும்?

மருந்தை காற்று புகாத டப்பாவில் வைத்திருங்கள். மருந்தின்மீது வெப்பமோ நேரடி சூரிய ஒளியோ படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

Ministry of Health　National Healthcare Group　SingHealth



# நோயாளி தகவல் கையேடு



# ஹிஸ்டமின் எதிர்ப்பு மருந்துகள்

## Antihistamines

T22R0

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

துசியினால் ஏற்படும் சளிக் காய்ச்சல் (hay-fever), அரிப்பு, மூக்கில் சளி வடிதல் போன்ற ஒவ்வாமைப் பிரச்னைகளைப் போக்க அல்லது தடுக்க இந்த மருந்து பயன்படுத்தப்படுகிறது.

சில வேளைகளில் இந்த மருந்து வேறு பிரச்னைகளுக்கும் பயன்படும்; மேல் விவரங்களுக்கு உங்கள் மருத்துவர் அல்லது மருந்தாளரைக் கேளுங்கள்.

| மருந்து | செயல் |
|---|---|
| புரோமதசைன் (Promethazine)<br>குளோர்ஃபநிரமைன் (Chlorpheniramine)<br>ஹைட்ராக்சிசைன் (Hydroxyzine)<br>லொரடாடின் (Loratadine)<br>செடிரிசைன் (Cetirizine)<br>புக்ளிசைன் (Buclizine) | இம்மருந்து உடலில் உற்பத்தியாகும் ஹிஸ்டமின் ஏற்படுத்தும் பாதிப்பைத் தடுக்கிறது. ஹிஸ்டமின், அரிப்பு, தும்மல், மூக்கிலும் கண்ணிலும் நீர் வடிதல் போன்ற உபாதைகளை ஏற்படுத்துகிறது. சில சமயங்களில் இது நுரையீரலின் காற்றுக்குழாய்களை அடைத்துவிடுவதால் மூச்சு விடுவது சிரமமாக இருக்கும்.<br>இம்மருந்து மாத்திரை மற்றும் திரவ வடிவத்தில் கிடைக்கிறது. |

## மருந்தை நான் **எப்படி** உட்கொள்ள வேண்டும்?

மருந்தின் அளவு ஒவ்வொரு நோயாளிக்கும் வேறுபடும். மருத்துவர் கூறுவதை அல்லது மருந்து விவரக் குறிப்பில் இருப்பதைப் பின்பற்றுங்கள். மருத்துவரின் அனுமதி இல்லாமல் மருந்தின் அளவை ஒருபோதும் மாற்றாதீர்கள்.





ஒரு நாளில் எத்தனை முறை, எவ்வளவு கால இடைவெளி விட்டு மருந்து உட்கொள்ள வேண்டும் என்பது, மருந்து குறுகிய காலத்திற்கு வேலை செய்யும் வகையா அல்லது நீண்ட நேரத்திற்கு வேலை செய்யும் வகையா என்பதைப் பொறுத்தது.
நீண்ட நேரத்திற்கு வேலை செய்யும் மாத்திரை என்றால், அதை அப்படியே முழுதாக விழுங்க வேண்டும். அதை உடைத்தோ, நசுக்கியோ அல்லது மென்றோ விழுங்கக் கூடாது.

ஹிஸ்டமின் எதிர்ப்பு மருந்துகளை உணவுடன் உட்கொள்ளலாம்.

மருந்தைச் சரியான முறையில் எடுக்கத் தெரியவில்லையென்றால் உங்கள் மருந்தாளரைக் கேளுங்கள்.

## மருந்து உட்கொள்ள **நான் மறந்துவிட்டால்** என்ன செய்வது?

வழக்கமாக மருந்து உட்கொண்டு வரும்போது, ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், எடுக்கத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளையிலிருந்து வழக்கம்போல் தொடருங்கள். முதல் வேளையில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு உட்கொள்ளாதீர்கள்.

## இம்மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க- விளைவுகள்** யாவை?

பக்க-விளைவுகள் பொதுவாக இருக்காது என்றாலும், அவை ஏற்படக்கூடிய சாத்தியமும் உள்ளது. பக்க-விளைவுகள் முதலில் இருந்தாலும், மருந்துக்கு உடல் பழகிக் கொண்டுவரும்போது அவை பொதுவாக மறைந்துவிடும். எனினும், கீழ்க்காணும் பக்க-விளைவுகள் நீடித்தாலோ அல்லது தொந்தரவு கொடுத்தாலோ, மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள்.

| மருந்து | பக்க-விளைவுகள் |
|---|---|
| புரோமதசைன்<br>குளோர்ஃபநிரமைன்<br>ஹைட்ராக்சிசைன்<br>லொரடாடின்<br>செடிரிசைன்<br>புக்ளிசைன் | மந்தம்<br>தலைச் சுற்றல்<br>வாய், மூக்கு அல்லது தொண்டை வரண்டு போதல் |

இம்மருந்துகளை எடுக்கும்போது வழக்கத்திற்கு மாறான பக்க-விளைவுகள் ஏதும் ஏற்பட்டால், மருத்துவரை உடனே பாருங்கள்.

கீழ்க்காணும் அறிகுறிகள் ஏதேனும் இருந்தால், மருத்துவரை உடனே அழையுங்கள்:

- துரித அல்லது முறையற்ற இருதயத் துடிப்பு
- உடல் நடுக்கம்
- பிரமை பிடித்தல்
- மூச்சுத்திணறல் அல்லது மூச்சு விடுவதில் சிரமம்





## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை?

இந்த மருந்தை எடுப்பதற்கு முன்பாக,

- எந்த மருந்தாவது உங்களுக்கு ஒவ்வாமை ஏற்படுத்துமா என்று மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.
- தற்சமயம் வேறு மருந்து ஏதாவது உட்கொண்டு வருகிறீர்களா என்பதை மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவியுங்கள். குறிப்பாக மனஅழுத்தம், இருதய நோய் மருந்துகள், ஆஸ்பிரின், தசை தளர்த்திகள், துக்க மருந்து, அமைதிப்படுத்தும் மருந்துகள்.
- தற்சமயம், அல்லது இதற்கு முன்பு, மருத்துவப் பிரச்னை ஏதாவது உங்களுக்கு இருந்ததா என்பதை மருத்துவரிடம் தெரிவியுங்கள். குறிப்பாக சுக்கியன் (prostate) பிரச்னை, கண்களில் மிகை அழுத்தம் (glaucoma), கல்லீரல் மற்றும் சிறுநீரக பிரச்னைகள்.
- இந்த மருந்து உட்கொள்ளும்போது மதுபானம் அருந்தாதீர்கள். மதுவின் பாதிப்பை இந்த மருந்து அதிகப்படுத்தும்.
- இந்த மருந்து சிலருக்கு வழக்கத்தைவிட அதிக துக்கத்தையும் மந்த நிலையையும் உண்டாக்கும். உங்களுக்கு எப்படி என்பதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள். விழிப்பு நிலையில் இல்லாதபோது வாகனம் ஓட்டுதல், இயந்திரம் இயக்குதல் போன்ற வேலைகளைச் செய்வது ஆபத்தில் முடியலாம்.